**28.01.2026.**

**O.S.No.60/2014**

**வா.சா.1 : ராமலிங்கம்**

**<u>1,3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) பிச்சாயி எனக்கு அம்மா வேண்டும். நல்லம்மாள் எனக்கு தங்கை வேண்டும் என்றால் சரிதான். ராஜ்குமார் எனது தம்பி ஆவார். எனது அப்பா சோலைமுத்து நலமுடன் உள்ளார். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சௌந்தரம்மாள் வழக்கு போடும்போது இருந்தார். பின்னிட்டு இறந்து விட்டார். செல்லம்மாள் ஒதியத்தூர் ஊரைச் சார்ந்தவர். எனக்கு சௌந்தரம்மாள் என் அப்பாவின் சித்தப்பா மனைவி. செல்லம்மாள் என்பவர் சௌந்தரம்மாள் என்பவரின் மகள்.

2) காந்தி என்பவர் சௌந்தரம்மாளின் மகன். 6ம் பிரதிவாதி செல்வராஜ் என்பவர் காந்தியின் பாகத்தை வாங்கிய 3ம் நபர் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் உறவினர் தான் என்றால் சரிதான். எனது அப்பாவை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் இந்த சொத்து எனது அம்மாவின் சொத்து. அதற்கு நாங்கள் வாரிசு என்பதால் எனது அப்பாவை சேர்க்கவில்லை. மேற்படி சொத்து எவ்வாறு எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் அந்த சொத்து எனது அம்மாவின் அப்பாவின் சொத்து.

3) மேற்படி சொத்து அம்மா வழி சொத்து என்பதால் எனது அப்பாவை சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது அம்மாவின் அப்பாவுக்கு எவ்வாறு மேற்படி சொத்து பாத்தியப்பட்டது என்றால் செங்கமலைக்கு இரண்டு வாரிசுகள் செல்லமுத்துவும் நல்லுகவுண்டர். இரண்டு பேருக்கும் பிரித்து கொடுத்ததின் அடிப்படையில் மேற்படி சொத்து செல்லமுத்துவுக்கு வந்தது. செங்கமலைக்கு மேற்படி சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் அவருடைய அப்பா கொடுத்து இருப்பார். வழக்கு எத்தனை ஏக்கருக்கு போட்டுள்ளேன் என்றால் 2.79 ஏக்கருக்கு வழக்கு போட்டுள்ளேன்.

கவர்பணை கிராமத்தில் சொத்து உள்ளது. எனது அம்மா மட்டுமே செல்லமுத்துவுக்கு ஒரே வாரிசு.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.01.28 17:44:11 +0530

**Subordinate Judge, Attur.**